வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු








Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 04.05.2026 திங்கட்கிழமை | இதழ் : 118 | பக்கங்கள் : 08


## தையிட்டி விடயத்தில் பலாலி பொலிஸ் இன நல்லுறவை ஏற்படுத்தவே முயற்சி!

### இளங்குமரன் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே. 04

தையிட்டி விகாரை விடயத்தில், பலாலி பொலிஸார் இனங்களுக்கு இடையிலான நல்லுறவை ஏற்படுத்தவே செயற்படுகின்றனர் என தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரைக்குள் இருக்கும் வீதியை மீட்கிறோம் என படம் காட்டி இனவாதிகளுக்கு தீனி போடுகின்றனர் என்வும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தையிட்டி பகுதியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்ய முயற்சித்தவேளை, காணி உரிமையாளர்கள் சிலருக்கு நம்பிக்கை இல்லை என்பாதல் குழப்பம் ஏற்பட்டதால், காணி அளவீடு இடம்பெறாது போனது. மீண்டும் காணி உரிமையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் பேசிக் காணிகளை அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.



இந்த விகாரை, எமது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதில்லை. காணிகளை மீளக் கையளிக்கவே நாங்கள் முயற்சிக்கின்றோம். எமது அரசாங்கத்தில் காணிகளை சுவீகரிக்கும் எண்ணம் எமக்கில்லை.

காணி உரிமையாளர்களுடன் மீண்டும் பேசி காணிகளை அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் எவரும் வரவில்லை. எழுத்துமூலத்தை விட எம் மீதான மக்களின் நம்பிக்கையே எமக்கு மிக முக்கியம்.

பவானி வீதியை மிக துரிதமாக விடுவிக்க

07

## மாலைதீவு ஜனாதிபதி கொழும்புக்கு வந்தார்

கொழும்பு, மே. 04

மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்ஸு, நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று மாலை கொழும்பை வந்தடைந்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விடுத்த உத்தி யோகபூர்வ அழைப்பினை ஏற்றே அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

07



## பாடசாலை பஸ் கட்டணமும் உயர்கிறது!

கொழும்பு, மே. 04

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கமைய, டீசல் விலை அதிகரித்துள்ளதால், பாடசாலை போக்குவரத்து கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டிய நிலை

07

## வரி, டொலர் மதிப்பு உயர்வால் வாகனங்களின் விலை உயரும்!

கொழும்பு, மே. 04

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கப்படலாம் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

சமூக பாதுகாப்பு வரி 2.5 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டமை மற்றும் டொலரின் மதிப்பு உயர்வடைந்துள்ளமைஆகிய காரணங்களால், இந்த அதிகரிப்பு ஏற்படக்கூடும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விலை உயர்வானது அனைத்து வகையான வாகனங்களையும் உள்ளடக்கியதாக

07

## ரஷ்ய சுகாதார அமைச்சர் குழுவும் கொழும்பு வருகை

கொழும்பு, மே. 04

ரஷ்ய நாட்டின் சுகாதார அமைச்சர் மிகைல் முராஷ்கோ உட்பட 07 பேர் கொண்ட குழு நேற்று காலை இலங்கையை வந்தடைந்தது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சிறப்பு விருந்தினர் வரவேற்பு வளாகத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிருதசாந்த அபேசேன, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகத்தின் செயலாளர் அனில் ஜசிங்க மற்றும் இயக்குநர் அனில் சமரநாயக்க, இலங்கைக்கான ரஷ்ய நாட்டின் தூதுவர்

07

## காலி சிறையில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மே. 04

காலி சிறைச்சாலை வளாகத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையில் இருந்த இரண்டு கைதிகள் தப்பிச்

07

## பஸ் கட்டணம் உயராது!

கொழும்பு, மே. 04

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்திற்கு அமைய நேற்று முன் தினம் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும், அந்த மாற்றத்தை தற்போதைக்கு பஸ் கட்டண திருத்தத்தில் பயன்படுத்தமுடியாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருத்தப்பட்ட விலையை உடனடியாக கட்டணங்களில் பிரதிபலிக்கச் செய்ய முடியாது என்றாலும், தற்போதைய நிலையில் பஸ்

07

## தொழிலுக்கு சென்ற 2 மீனவர்கள் மாயம்!

### தேடும் பணிகள் தீவிரம்

முல்லைத்தீவு, மே. 04

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் இதுவரை கரை திரும்பாத நிலையில், அவர்களைத் தேடும் பணிகள் நேற்று மீனவர்களால் முன்னெடுக் கப்பட்டபோதும் அவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

நேற்று முன் தினம் காலை 10 மணியளவில்

07

## நாட்டை வந்தடைந்த எரிபொருள் கப்பல்கள்

### கியூ.ஆர். ஒதுக்கீட்டை அதிகரிக்க திட்டம்

கொழும்பு, மே. 04

நாட்டின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பெட்ரோல் மற்றும் டீசல் அடங்கிய இரண்டு கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

துறைமுக அதிகாரிகளின் தகவல்படி, முதலாவது கப்பலில் 20,000 மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 20,000 மெற்றிக் தொன் டீசல் இரண்டாவது கப்பலில் 35,300 மெற்றிக் தொன் பெற்றோல் என்பன இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், தலா 37,000 மெற்றிக் தொன் டீசல் அடங்கிய மேலும் இரண்டு கப்பல்கள் இந்த மாத இறுதியில் வருகை தரவுள்ளதாக இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள கையிருப்பு மற்றும் திட்டமிடப்பட்ட இறக்குமதிகள் மூலம் எதிர்வரும் ஜூலை மாதம் வரை தட்டுப்பாடின்றி எரிபொருளை வழங்க முடியும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் போதுமான அளவு விநியோகம் தொடர்கின்றது. கையிருப்பு நிலை சீராக உள்ளதால், தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர். எரிபொருள்

07

## நிதிச் சேவைகள் மீதான வற் வரியை ஜூலை முதல் உயர்த்த முன்மொழிவு

கொழும்பு, மே. 04

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில், நிதிச் சேவைகள் மீதான வெற் வரி வீதத்தை தற்போதுள்ள 18 வீதத்திலிருந்து 20.5 வீதமாக அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

2026 ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில், திருத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் ஜூலை மாதம்

07

## நிதியமைச்சரான ஜனாதிபதி நாளை பாராளுமன்றில் உரை

கொழும்பு, மே. 04

அவுஸ்ரேலிய கடன் வழங்குநருக்கு திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் நிதியமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளார்.

2025 செப்ரெம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் திறைசேரியால் செலுத்தப்பட்ட 10 கொடுப்பனவுகளின் மொத்த தொகையான 2.5 மில்லியன் டொலர் மோசடி

07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. தபால் சேவைக்கு வழங்கவேண்டிய 19 கோடி ரூபா இணையம் ஊடாக மோசடி!

## தபால் மா அதிபர் ருவன் சத்குமார அறிவிப்பு

கொழும்பு, மே. 04

அமெரிக்க தபால் சேவைக்கு வழங்கப்பட வேண்டிய சுமார் 19 கோடி ரூபாய் நிதி, திட்டமிட்ட இணையவழித் தாக்குதல் ஊடாக மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தபால் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்துள்ளார்.

கடந்த 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக இந்த நிதித் திருட்டு அரங்கேறியுள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

முதற்கட்டமாக 2024 ஆம் ஆண்டில் ஒரு சிறிய தொகையுடனும், பின்னர் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சுமார் 12 கோடி ரூபாயும், அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் சுமார் 6 கோடி ரூபாயும் இவ்வாறு திசைதிருப்பப்பட்டுள்ளன.

அமெரிக்க தபால் சேவை போன்றே போலியான மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்கி, மூன்றாம் தரப்பு இடைத்தரகர்கள் ஊடாக இந்த நிதி வேறு வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு விவரங்களுக்கும், நிதி மாற்றப்பட்ட கணக்கு விவரங்களுக்கும் இடையே பாரிய முரண்பாடுகள் காணப்படுவதாகவும், இதனை அதிகாரிகள் முறையாகச் சரி பார்த்திருந்தால் இந்த 19 கோடி ரூபாய் இழப்பைத் தடுத்திருக்க முடியும் எனவும் தபால் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அமெரிக்க அதிகாரிகளிடம் உதவி கோரப்பட்டுள்ள போதிலும், இதுவரை அங்கிருந்து எவ்விதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

தற்போது இது குறித்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், இனிவரும் காலங்களில் பாதுகாப்பற்ற மின்னஞ்சல் ஊடாக நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்ளாது இருக்கத் தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (அ)

# செஸ் வரி முறைமையை 2029 இற்குள் நீக்க திட்டம்!

கொழும்பு, மே. 04

இலங்கையில் நீண்ட காலமாக நடைமுறையிலுள்ள செஸ் வரி முறையை, வரும் 2029 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக நீக்குவதற்கான விரிவான திட்டத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் பரிந்துரைக்கு அமைய, வர்த்தகப் போட்டித்தன்மையை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துனெத்தியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் படி, சுமார் இரண்டாயிரத்து 634 உற்பத்திப் பொருள்கள் மீதான மேலதிக வரிகள் படிமுறை ரீதியாகக் குறைக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக, ஆடைத் தொழிற்றுறைக்கு அவசியமான துணி வகைகள் மற்றும் குறைந்த வரி வீதங்களைக் கொண்ட பொருள்கள் மீதான வரிகள் ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இடைநிலை உற்பத்திப் பொருள்கள் மீதான வரிகள் 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் பாதியாகக் குறைக்கப்படவுள்ளன.

எனினும், உள்நாட்டுத் தயாரிப்புகளான ஓடுகள், சிமெந்து மற்றும் ரயர்கள் போன்ற உணர்திறன் மிக்க 107 உற்பத்திப் பொருள்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், அவற்றுக்கான வரி நீக்கம் 2029 ஆம் ஆண்டு வரை பிற்போடப்பட்டுள்ளது. (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தார் மைத்திரி

## முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி

கொழும்பு, மே. 04

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்கூட்டியே அறிந்திருந்தார் எனத் தான் நம்புவதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அப்போதைய அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவும் இந்தத் தாக்குதல் குறித்த புலனாய்வுத் தகவல்களை அறிந்திருந்ததுடன், அதனை அவர் மூடிமறைக்கச் செயற்பட்டார் எனவும் ஹேமசிறி பெர்னாண்டோ குற்றம் சுமத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் தாக்குதல் குறித்த தகவல்கள் ஜனாதிபதிக்குத் தெரிந்திருந்தது என்றும், அவர் வெளிநாடு சென்றிருந்த வேளையில் மூத்த அதிகாரி என்ற ரீதியில் தான் மட்டும் இந்த வழக்கில் சிக்க வைக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

உண்மையான குற்றவாளிகள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுவதாகத் தெரிவித்த ஹேமசிறி பெர்னாண்டோ, கடமைகளில் இருந்து தான் தவறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை இதன்போது நிராகரித்தார். (அ)

# காங்கேசன் துறைமுக அபிவிருத்தி ஒப்பந்த வரைவு இம்மாதம் நிறைவு

கொழும்பு, மே. 04

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இயக்குவது தொடர்பாக இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் வரைவுப் பணிகள் இந்த மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சு மற்றும் துறைமுக அதிகாரசபையுடன் கடந்த வாரம் விரிவாக ஆராயப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இந்த ஆலோசனைகளுக்கு அமைய திருத்தப்பட்ட புதிய வரைவு, அடுத்த வார இறுதியில் தயாராகிவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையினால் முன்மொழியப்பட்டுள்ள இந்த உடன்படிக்கையின்படி, காங்கேசன் துறை துறைமுகத்தின் 51 வீத பங்குகளை இலங்கை துறைமுக அதிகாரசபையும், எஞ்சிய 49 வீத பங்குகளை இந்தியாவினால் பரிந்துரைக்கப்படும் நிறுவனமும் கொண்டிருக்கும்.

சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர் இந்திய நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், குறித்த துறைமுகத்தை 30 ஆண்டுகளுக்கு இயக்குவதற்கான அதிகாரம் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளது.

இரு நாடுகளின் இணக்கப்பாட்டின் பின்னர், இந்த உடன்படிக்கை அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திறைசேரி அதிகாரியின் மரணம் விசாரணை அறிக்கை நீதிமன்றுக்கு

கொழும்பு, மே. 04

மத்திய திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி திருடப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருந்த நிதி அமைச்சின் பதில் பணிப்பாளர் ரங்க ராஜபக்ஷவின் மரணம் குறித்த விசாரணை அறிக்கை, எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு சிரேஷ்ட சட்ட வைத்திய நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவினால் முன்னெடுக்கப்பட்ட பிரேத பரிசோதனையின் ஆரம்பக் கட்ட முடிவுகளின்படி, இது ஒரு தற்கொலையாக இருக்கலாம் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை தனது வீட்டின் தோட்டத்திற்குச் சென்ற 50 வயதுடைய ரங்க ராஜபக்ஷ, பிற்பகல் வேளையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது காலில் ஆழமான வெட்டுக்காயம் ஒன்று காணப்பட்டதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திறைசேரி நிதி மோசடி விவகாரம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் ஏற்கனவே மூன்று முறை இவரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவருக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்த மர்ம மரணம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஏயார்பஸ் கொள்முதல் விசாரணை மகிந்த உள்ளிட்டோருக்கு அழைப்பு

கொழும்பு, மே. 04

ஏயார்பஸ் வானூர்தி கொள்முதல் தொடர்பான விசாரணைக்கு இணங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பியங்கர ஜெயரத்ன ஆகியோருக்கு வாக்குமூலம் வழங்குமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அவர்கள் இருவரும் வருகின்ற மே 12 ஆம் திகதி இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை, ஏயார்பஸ் வானூர்தி கொள்முதல் செயல்முறையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும், தேவையான சட்ட நடவடிக்கைகள் எதிர காலத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆட்சியாளர்களின் வெற்றுச்சவால்களுக்கு விவசாய சமூகம் அஞ்சப்போவதில்லை“

கொழும்பு, மே. 04

இன்று ஆட்சியில் இருப்பவர்கள் பொறுப்புள்ள அமைச்சர்களாக செயல்படாமல், வீதிகளில் சண்டியத்தனம் செய்யும் ரவுடிகளைப்போல நடந்து கொள்கின்றனர். இவ்வாறான வெற்று மிரட்டல்களுக்கு விவசாய சமூகம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. உர மானியத்தை வழங்கத்தவறிய அரசாங்கம் தேர்தலை கண்டு நடுங்குகிறது என்று தேசிய விவசாய ஒற்றுமை ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

தேசிய விவசாய ஒற்றுமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலகத் தொழிலாளர் தினமானது, இந்த நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அமையவில்லை.

மாறாக, அரசியல் கட்சிகள் தமது பலத்தை நிரூபிப்பதற்கும், ஒருவரையொருவர் மிரட்டிக் கொள்வதற்குமான மேடையாகவே அது அமைந்திருந்தது. குறிப்பாக, அநுர அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் அமைச்சர்களும் மேடைகளில் மக்கள் கூட்டத்தைக் கண்டதும் உணர்ச்சி வசப்பட்டு, வரலாற்றை மறந்து பேசுகின்றனர்.

2024 செப்ரெம்பரில் ஜனாதிபதி பதவியேற்ற போது, அதற்கு முன்னரே பெரும்போகச் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, சந்தையில் போதியளவு நெல் இருப்பு இருந்தது என்பதே உண்மை. ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.- என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
04.04.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சூரியா விக்கிரமசிங்க
## (1934 - 2026)

மனித உரிமைகளுக்காகவும் நீதிக்காகவும் போராடுவதற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த மிகவும் துணிச்சலான ஆளுமைகளில் ஒருவரை இலங்கை கடந்த வாரம் இழந்து விட்டது. சிவில் உரிமைகள் இயக்கத்தின் முகமாக விளங்கிய சூரியா விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை (ஏப்ரில் 26) தனது 92 வது வயதில் காலமானார்.

இலங்கையின் மிகவும் குறிப்பிடத்தக்க முற்போக்கான குடும்பங்களில் ஒன்றில் பிறந்தவர் சூரியா. இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிதாமகர்களில் ஒருவரான வைத்தியக் கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க அவரது தந்தையார். 1930களில் இலங்கைக்கு வந்த பிரிட்டனைச் சேர்ந்த சோசலிசவாதி டொறின் யங் விக்கிரமசிங்க அவரது தாயார். பெற்றோர்கள் இருவருமே கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்கள்.

இலங்கையில் காலனித்துவத்துக்கு எதிராக 1930 களில் முன்னெடுக்கப்பட்ட சூரியமல் (பூவரசம் பூ) இயக்கத்தில் முன்னணிப் பங்கு வகித்த விக்கிரமசிங்க தம்பதியர் தங்களது மகளுக்கு சூரியா என்று பெயர் வைத்தனர். ஐந்து தசாப்தங்களுக்கும் அதிகமான பொது வாழ்வில் சூரியா தார்மீகத் தெளிவு, தனிப்பட்ட தைரியம் மற்றும் சட்ட ரீதியான துல்லியம் ஆகியவற்றின் ஒரு கலவையாக தனது பணிகளை முன்னெடுத்தார். அவரின் மறைவு இலங்கையில் பெரியதொரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சிவில் உரிமைகள் இயக்கத்தை ஆரம்பித்து அதன் செயலாளராக பணியாற்றிய சூரியா அதை இலங்கையின் மிகவும் கொள்கைப் பிடிப்புள்ள சிவில் சமூக அமைப்புக்களில் ஒன்றாக மாற்றினார். கிளர்ச்சிகள், உள்நாட்டுப் போர், அவசரகாலச் சட்ட ஆட்சி மற்றும் அரசியல் கொந்தளிப்புக்களுக்கு மத்தியில் அத்துமீறல்களுக்கு எதிரான அச்சமற்ற போராளியாக சூரியா விளங்கினார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான எந்தவொரு சமாதானத் தீர்வுக்கும் அடிப்படையாக மனித உரிமைகள் பாதுகாப்பும் கண்காணிப்பும் அமைய வேண்டும் என்று முதலில் வாதிட்ட அமைப்புக்களில் சூரியா தலைமையிலான சிவில் உரிமைகள் இயக்கம் முக்கியமானது. இலங்கை முழுவதும் மனித உரிமைகளைச் சட்டரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் சரியாகப் பாதுகாப்பது மோதலுக்கான எந்தவொரு அரசியல் தீர்வினதும் பிரிக்க முடியாத அங்கமாக இருக்க வேண்டும் என்பது சிவில் உரிமைகள் இயக்கத்தின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

உள்நாட்டில் மாத்திரமல்ல, சர்வதேச மட்டத்திலும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் ஆளுமையாக விளங்கிய சூரியா சர்வதேச மன்னிப்புச் சபையின் சர்வதேச செயற்குழுவின் தலைவராக (1982 - 1985) பணியாற்றினார். 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களுடன் தொடர்பு வைத்திருப்பதே ஆபத்தானது என்று கருதப்பட்ட காலத்தில் சூரியா முன்னாள் செனட்டர் எஸ். நடேசன் கியூ.சி.யுடன் சேர்ந்து குற்றவியல் நீதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடினார்.

மரண தண்டனைக்கு எதிராக சூரியா முன்னெடுத்த பிரசாரம் அவரது தார்மீக நம்பிக்கையின் மிகவும் சக்திவாய்ந்த வெளிப்பாடுகளில் ஒன்று என்று வர்ணிக்கப்பட்டது. பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவின் பதவி நீக்கம் இலங்கை ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அச்சுறுத்தியபோது அதற்கு எதிராக துணிச்சலுடன் குரல் கொடுத்த முதன்மையானவர்களில் சூரியாவும் ஒருவர். அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலப் பகுதியில் அவர் ஒருபோதும் தனது அர்ப்பணிப்பில் இருந்து பின்வாங்கியதில்லை. அவர் அரசியல் ஆதாயங்களுக்காக கொள்கைகளைச் சமரசம் செய்ததில்லை.

இலங்கையில் உரிமைகளுக்கான போராட்ட இயக்கங்களின் வரலாற்றில் சூரியா விட்டுச் செல்லும் மரபு என்றென்றைக்கும் முன்னுதாரணமாக விளங்கும். ஈழநாடு சிரந்தாழ்த்தி அதன் அஞ்சலியைச் செலுத்துகிறது.

# அச்சுறுத்தலுக்கு ஒருபோதும் அச்சமடைய போவதில்லை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, மே 04

யாருடைய வழக்கை முதலில் விசாரிக்க வேண்டும், யாரை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று பெலவத்த கட்சி காரியாலயமே தீர்மானிக்கிறது. மே தின கூட்டத்தில் தொழிலாளர்களின் உரிமை பற்றி ஜனாதிபதி, ஆளும் தரப்பினர் பேசவில்லை. எம்மை சிறைக்கு அனுப்புவது பற்றியே பேசுகிறார்கள். இவ்வாறான அச்சுறுத்தலுக்கு நாங்கள் ஒருபோதும் அச்சமடைய போவதில்லை. அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்துவோம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

களனி விகாரையில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு போலியான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியது. அந்த வாக்குறுதிகள் போலியானவை என்று மக்கள் இன்று விளங்கிக் கொண்டுள்ளதால் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது.இவர்களின் அரசியல் கொள்கை இதுவே.

பொய்களை நாங்கள் சுட்டிக்காட்டும் போது அதை ஏற்றுக்கொள்ளும் மனநிலை அரசாங்கத்துக்கு கிடையாது. வழக்குகளை குறிப்பிட்டு எம்மை அச்சுறுத்த முடியாது. யாருடைய வழக்கை முதலில் விசாரிக்க வேண்டும், யாரை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று பெலவத்த கட்சி காரியாலயமே தீர்மானிக்கிறது.

மே தின கூட்டத்தில் தொழிலாளர்களின் உரிமை பற்றி ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பினர் பேசவில்லை. எம்மை சிறைக்கு அனுப்புவது பற்றியே பேசுகிறார்கள்.

இவ்வாறான அச்சுறுத்தலுக்கு நாங்கள் ஒருபோதும் அச்சமடைய போவதில்லை. அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்துவோம்.

323 கொள்கலன்கள் விடுவிப்பு பற்றி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளித்த டான் பிரசாத் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்.

2.5 மில்லியன் டொலர் மோசடி விவகாரத்தில் திறைசேரியின் முன்னாள் உதவி பணிப்பாளர் உயிரிழந்தார். இது சந்தேகத்துக்கிடமானது - என்றார். (எ)

# கனேடிய, பிரித்தானிய உயர்ஸ்தானிகர்களை கிழக்கில் கூட்டாக சந்திக்கும் தமிழரசுக்கட்சி

கொழும்பு, மே 04

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இஸபெல் கத்ரின் மார்ட்டின் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் ஆகியோரை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பிரதிநிதிகள் இன்று திங்கட்கிழமை கூட்டாகச் சந்திக்கவுள்ளனர்.

கனேடிய உயர்ஸ்தானிகர் இஸபெல் கத்ரின் மார்ட்டின் நேற்று முன்தினம் கிழக்கு மாகாணத்துக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக பதவியேற்றதன் பின்னர் முதன்முறையாகக் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் அவர், மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்து பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

இதேவேளை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்கும் கிழக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி கனேடிய மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர்களுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்ற மற்றும் பிராந்திய மட்டப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் அதன் பாராளுமன்றக்குழுத் தலைவர் இரா. சாணக்கியன், தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி உறுப்பினர்கள், மகளிர் பிரிவு உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் மற்றும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் கே. துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம், படையினரால் கையகப்படுத்தப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாமல் உள்ள காணிகள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர் பிரயோகம் என்பன உள்ளடங்கலாக தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்னைகள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமை குறித்து இரு நாட்டு உயர்ஸ்தானிகர்களிடமும் விரிவாக எடுத்துரைக்கப்படவுள்ளது. (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 593 பேர் கைது

கொழும்பு, மே 04

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப் பின்போது, 593 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 27,042 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 15 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 229 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 122 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மது போதையில் வாகனம் செலுத்திய 121 பேரும், கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 88 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3977 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள்.

**இடபம்**
மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் அனுகூலம் உண்டு. மின்னணு மின்சார சாத னங்கள் வாங்குவீர்கள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக முடியும். அமோகமான நாள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். எளிதில் செரிமானம் ஆகக் கூடிய உணவுகளை உட்கொள்ளுங்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் புரோக்கரேஜ் வகைகளால் லாபம் அடைவீர்கள்.

**கன்னி**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பிரபலங்களை சரியாக பயன்படுத்திக் கொள்வீர்கள். அரசு காரியங்கள் வெற்றியடையும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இதுவரை இருந்த மனகசப்புகள் நீங்கி ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். முக்கிய முடி வுகள் எடுப்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சோர்வு களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். முயற்சியில் வெற்றி பெறும் நாள்.

**மகரம்**
எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களால் பிரச்னைகள் வந்து செல்லும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

# சட்டவிரோத மீன்பிடியால் முல்லைத்தீவில் மோதல்!

## மூவர் காயம், மூவர் கைது

முல்லைத்தீவு, மே 04

முல்லைத்தீவு நந்திக்கடல் களப்புப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற மோதல் சம்பவத் தில் மூவர் காயமடைந்து முல் லைத்தீவு மாவட்ட மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டனர்.

நீராவிப்பிட்டியைச் சேர்ந்த முஸ்லீம் சமூகத்தவருக்கும், கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த தமிழ் சமூகத்தினருக்கும் இடையே சட்டவிரோத தொழிலில் ஈடுபடுதல் தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் கடுமையான முரண்பாடாக மாறி தாக்குதலாக வெடித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 49 வயது மதிக்கத்தக்க இரு நபர்கள் தாக்குதலுக்கு இலக்காகி படுகா யங்களுக்குள்ளாகியுள்ளனர். அத்தோடு நீராவிப்பிட்டியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனும் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சம்பவத்தை அப்பகுதியில் இருந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் மூவரை கைது செய்ததுடன் ஏனையவர்கள் தப்பி சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த முல்லைத் தீவு மாவட்ட மீனவ சங்கங்க ளின் மாவட்ட தலைவர் அன்னலிங்கம் நடனலிங்கம், "நீரியல் வளத்திணைக்களம் சட்டவிரோத தொழிலை முறையாக கட்டுப்படுத்தியிருந்தால் இவ்வாறான சம்பவங் கள் இடம்பெற்றிருக்காது" என குற்றம்சுமத்தினார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தேனிசை செல்லப்பாவுக்கு அஞ்சலி

வவுனியா, மே 04

ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் எழுச்சிப் பாடல்கள் மூலம் மக்களின் மனங்களில் இடம் பிடித்த அமரர் பாசறைப்பாணர் தேனிசை செல்லப்பாவுக்கு நேற்று முன்தினம் வவுனியாவில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா - புளியங்குளம் பரசங்குளம் பகுதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச கிளைக் காரியாலயத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான சுசீலன், தனுசன், தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயல்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)




# யாழ். போதனா மருத்துவமனை கணக்காளருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 04

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 06 வருடங்களுக்கு மேலாக கணக்காளராக கடமையாற்றிய செல்வராசா காண்டீபன், இடமாற்றம் பெற்று செல்வதையடுத்து, யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகத்தால் கௌரவிப்பு - பிரியாவிடை நிகழ்வு நடை பெற்றது.

இவர் யாழ். மாநகர சபை கணக்காளராக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த மகாபாரத தொடர் அருளுரை

யாழ்ப்பாணம், மே 04

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் நடத்தப்பட்ட வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மகாபாரதம் தொடர் சொற்பொழிவை சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

இதில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், ஆச்சிரம தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கணினி குற்றங்களுடன் தொடர்பு மேலும் 37 சீனப்பிரஜைகள் கைது!

கொழும்பு, மே 04

கணினி குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 36 வெளிநாட்டு ஆண்கள் மற்றும் ஒரு பெண் உட்பட 37 பேர் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினர் மற்றும் தலங்கம பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் 23 முதல் 44 வயதுக்கு இடைப்பட்ட சீனப் பிரஜைகள் என அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் இருவரிடம் இலங்கையில் தங்கியிருப்பதற்கான விசா அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை என்பதுடன் ஒரு சந்தேகநபரிடம் கடவுச்சீட்டு இருக்கவில்லை, மற்றுமொருவரிடமிருந்து 2100 சட்டவிரோத சிகரெட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக தலங்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேகநபர்கள் தங்கியிருந்த கட்டடம் சீல் வைக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# வட்டுக்கோட்டையில் வாள்வெட்டு பெண்ணின் விரல் துண்டானது!

யாழ்ப்பாணம், மே 04

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலியகோவில் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் பெண்ணொருவரின் இரண்டு விரல்கள் துண்டாகின.

அயல் வீட்டு இளைஞனுக்கும் குறித்த பெண்ணின் குடும்பத்துக்கும் இடையே முரண்பாடு காணப்படுகிறது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவன் நேற்று முன்தினம் வேலை முடிந்து வந்தவேளை அவரை வழிமறித்து அவரது துவிச்சக்கர வண்டியை குறித்த இளைஞன் பறித்துள்ளார்.

இந்த நிலையில், இது குறித்து அவர் தனது மனைவிக்கு கூறிய நிலையில் மனைவி குறித்த இளைஞனுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். இதன்போது, குறித்த இளைஞன் அந்த பெண் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளார்.

வாள்வெட்டில் படுகாயமடைந்த பெண், அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

குறித்த இளைஞனுக்கு எதிராக ஏற்கனவே பல வழக்குகள் உள்ளன.

(எ-05)

# மகிந்தானந்த அறக்கட்டளை வசமிருந்த காணி, கட்டடங்கள் மீள ஒப்படைப்பு

கொழும்பு, மே 04

சுமார் 20 வருடங்களாக புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தை குத்தகை அடிப்படையில் பெற்று அதனை நடத்திவந்த மகிந்தானந்த அறக்கட்டளையின் உடைமைகள் மீண்டும் புகையிரத திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் இயங்கி வந்த மகிந்தானந்த அளுத்கமகே அறக்கட்டளை மற்றும் அதனைச் சார்ந்த வளாகத்தை ஒரு மாத காலத்துக்குள் மீண்டும் புகையிரத திணைக்களம் கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய புகையிரத திணைக்கள அதிகாரிகளிடம். அந்த அறக்கட்டளைக் கட்டடங்கள் மற்றும் காணியை மீண்டும் ஒப்படைக்கும் பணி மகிந்தானந்த அறக்கட்டளையின் செயலாளர் சாமிக தர்மதிலகவால் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இந்தக் காணியை மக்களுக்கு பயனுள்ள வகையில் பொதுச் சந்தை வளாகமாகவும், ஏனைய நிறுவனங்களுக்காகவும் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# ஐ. ஓ. சி. எரிபொருள் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, மே 04

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகளை அதிகரித்ததைத் தொடர்ந்து, லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் தனது விலைகளை அதிகரித்துள்ளது.

இதன்படி, லங்கா ஒட்டோ டீசல் மற்றும் 92 ரக பெற்றோல் ஆகியவற்றின் விலைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய எரிபொருட்களின் விலைகளில் மாற்றங்கள் ஏதுமில்லை என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 392 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 410 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏனைய எரிபொருள் வகைகளின் விலைகளில் எந்தவொரு மாற்றத்தையும் செய்யாமல் இருக்க லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(எ)




# மின்னல் தாக்கி இளம் பெண் பலி!

காலி, மே 04

சீரற்ற வானிலை காரணமாக ஹபராதுவ- கொக்வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது மின்னல் தாக்கியதில் அங்கிருந்த இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு பெண் படுகாயமடைந்தார்.

இந்த விபத்தில் ஹபராதுவ- கொக்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது இளம் பெண்ணே உயிரிழந்தார்.

பாதிக்கப்பட்ட இரு பெண்களும் அப்பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிபவர்கள் எனவும், அவர்கள் தங்கியிருந்த விடுதியில் இருந்த போதே மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மற்றைய பெண் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# உருளைக்கிழங்கு இறக்குமதியை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

நுவரெலியா, மே 04

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மலையக உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களது அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்தி, உள்நாட்டு உருளைக்கிழங்கு உற்பத்திக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுத்தால், விவசாயப் பொருளாதாரம் வலுப்பெறும்.

தொழிலாளர்களுக்கு அதிகளவு வருமானத்தை பெற்றுக் கொடுக்க முடியும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். அதிகரிக்கும் உற்பத்திச் செலவு மலையக விவசாயத்தில் ஒரு தொழிலாளரைப் பராமரிக்க நாள் ஒன்றுக்கு 3,500 முதல் 5,000 ரூபாய் வரை செலவிட வேண்டியுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்ய 300 ரூபாய் செலவாகும் நிலையில், சந்தையில் அதனை 150 முதல் 200 ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சில தவறான முடிவுகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றம்சுமத்தியுள்ளனர்.

அரசாங்கம் முறையான திட்டங்களை வகுத்து விவசாய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்று மலையக உருளைக்கிழங்கு விவசாயிகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போதைப்பொருள் கடத்தலை ஒழிக்க அனைத்து நடவடிக்கைகளும் தயார்!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 04

போதைப்பொருள் கடத்தலை முறையாக கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொன்த தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய நபர்கள் குறித்த விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“போதைப்பொருள் கடத்தல் என்பது நீண்டகாலமாக இந்த நாட்டில் மிகவும் சுதந்திரமாக இருந்து வந்த ஒன்று. பெருமளவிலானோரின் ஆசீர்வாதம் மற்றும் செல்வாக்கின் கீழேயே அது முன்னெடுக்கப்பட்டது. ஆனால், இப்போது அவ்வாறு நடக்காது. அவை முறையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. போதைப்பொருளை இந்த நாட்டில் இருந்து ஒழிப்பதற்கு முப்படையினர், குறிப்பாக இந்த நாட்களில் கடற்படையினர் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அதற்குத் தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்குத் தேவையான அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். இந்தப் போதைப்பொருள் கடத்தல் முறையான வகையில் ஒழிக்கப்படும். இதனுடன் தொடர்புடைய திட்டமிட்ட குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள். இதன் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் மற்றும் இந்த வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளுக்கு முகங் கொடுக்க நேரிடும்“- என்றார். (எ)

# கண்டியில் இடைநிறுத்தப்பட்ட நீர் விநியோக திட்டம் ஆரம்பம்

கண்டி, மே 04

கண்டி - குண்டசாலை மற்றும் பல்லேகலை ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்னைக்கு தீர்வு காண 38 பில்லியன் ரூபாய் நிதி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது என்று நீர் விநியோக வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளர் சாந்த பண்டார தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


நீர் விநியோகத்திட்டம் மூலம் குண்டசாலை, பல்லேகல, ஹாரகம, பாத்தஹேவாஹெட்ட, பாத்ததும்பறையின் சில பகுதிகள் உட்பட 06 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நீர் விநியோகிக்கப்படவுள்ளது. 2012ஆம் ஆண்டு முதல் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும் இதன் ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்த ஒரு இந்திய நிறுவனம் 2019ஆம் ஆண்டு முறிவடைந்த நிலையில் இந்தத் திட்டம் இடைநடுவே கைவிடப்பட்டது.

இருப்பினும் நீர்வடிகாலமைப்பு சபையின் நிதி ஒதுக் கீட்டின் மூலம் 38 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பணிகள் தொடரப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கான நீர் கட்டுகஸ்தோட்டை மற்றும் பொல்கொல்லை பகுதிகளிலிருந்து பெறப்படவுள்ளது - என்றார்.

# போதைப்பொருள் கடத்தல்: 22 தேரர்களும் மறியலில்!

## பல திடுக்கிடும் தகவல்கள் வெளியீடு



கொழும்பு, மே 04

தாய்லாந்தில் இருந்து சுமார் 110 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய குஷ் மற்றும் ஹஷீஸ் ரக போதைப் பொருட்களை கடத்தி வந்த 22 தேரர்களையும், கடத்தி வரப்பட்ட குறித்த போதைப்பொருட்களை விமான நிலையத்தில் பெறுவதற்காக வந்திருந்த, அகுனுகொலே அமிதானந்தா தேரரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதிவான் சுபானி அபேசேகர உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தை விசாரித்து வரும் உதவி பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ நேற்று முன்தினம் மன்றில் தெரிவிக்கையில்,சந்திரகுமார தயாரத்ன என்ற சந்தேகநபர் இது தொடர்பில் கைது செய்யப்பட்டு கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, எதிர்வரும் 12ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குறித்த சந்தேகநபர் மூன்றாவது நபராகப் பெயரிடப்படுவார்.

இதேபோல் இந்த வழக்கில் அகுனகொல அமிதானந்தா தேரரால் வழிநடத்தப்பட்டதாகக் கூறப்படும் அம்பகஸ்முல்ல புன்யரத்னா தேரர் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் அந்தத் தேரர் தலைமறைவாக உள்ளார். இவ்வழக்குகளில் அந்தத் தேரர் நான்காவது சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

கடந்த 22ஆம் திகதி தாய்லாந்து சென்ற தேரர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கி, அந்த நாட்டிலிருந்து சம்பவத்தை வழிநடத்தியவருமான தம்மரக்கித்த அல்லது தம்மா என்ற தேரரை கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் இந்தத் தேரர் இந்த வழக்கில் ஐந்தாவது சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள் ளார் என்று உதவி பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த 25ஆம் திகதி 22 தேரர்களும் இலங்கைக்கு வந்தபோது, தம்மா என்ற தேரர் அவர்களுக்கான பயணப் பெட்டிகளைத் தயார் செய்திருந்தார் என்று மன்றில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து 22 சந்தேக நபர்கள் பெருமளவான போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இரவு 10.10 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து தாய் எயார் ஏசியா விமானம் மூலம் வருகை தந்த தேரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இதன்போது அவர்களது பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 110 கிலோ கிராமுக்கும் அதிகமான குஷ் மற்றும் ஹஷீஸ் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. ஒவ்வொருவரும் தலா 5 கிலோவுக்கும் மேல் எடுத்துச் வந்திருந்தனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வரலாற்றில் மிகப்பெரிய போதைப்பொருள் கைப்பற்றல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கிழக்கில் மழை, வடக்கில் வெப்பம்

கொழும்பு, மே 04

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல், வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் பதுளை மாவட்டங்களின் பல இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை, கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக் கூடும்.

தென் மாகாண கரையோரப் பிராந்தியங்களிலும் அத்துடன் கொழும்பு மாவட்டத்திலும் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங் களிலும் அத்துடன் கொழும்பு, கம்பஹா மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் பகல் வேளையில் அதிகரித்த வெப்பநிலை உணரப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

சிலாபம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான அத்துடன் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கைத்துப்பாக்கியுடன் ஒருவர் சிக்கினார்!

குருநாகல், மே 04

குருநாகல் - பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூனுவில பகுதியில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஜயவர்த்தனபுர விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஹூனுவில பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காக பன்னல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (எ)

# மோட்டார் சைக்கிள் விபத்து: ஒருவர் பலி: மூவர் காயம்!

புத்தளம், மே 04

ஹொரவபொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியில் 134 மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

திருகோணமலை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கு நுழைந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த நான்கு பேர் ஹொரவ பொத்தானை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒரு மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கப்புகொல்லாவ பகுதியைச் சேர்ந்த 64 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை ஹொரவபொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாலைதீவு...

கடந்த 2023 ஆம் ஆண்டு மாலைதீவு ஜனாதிபதி யாகப் பதவியேற்ற பின்னர், அவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

இந்த விஜயத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளார்.

அத்துடன், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் நோக்கில் பல முக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் இதன்போது கைச்சாத்திடப்பட வுள்ளன.

மாலைதீவு ஜனாதிபதியுடன் அந்நாட்டின் முதல் பெண்மணி, வெளிவிவகார அமைச்சர் மற்றும் சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சர்கள் பலரும் வருகை தந்துள் ளனர். (அ)

## பாடசாலை பஸ்...

லெவன் ஜகர்யன் ஆகியோரால் வரவேற்கப்பட்ட னர். தொடர்ந்து ரஷ்ய நாட்டின் சுகாதார அமைச்சர் மிகைல் முராஷ்கோ உள்ளிட்ட தூதுக்குழுவினருடன் கலந்துரையாடலும் நடைபெற்றது.

ரஷ்ய நாட்டின் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட தூ துக்குழுவினர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்துள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது, ரஷ்யாவுக்கும் இலங்கை க்கும் இடையிலான சுகாதாரத் துறையில் உறவுகளையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவது தொடர்பாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் விசேட கலந்துரையாடல் திட்டமிட ப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடலை நடத்தவும் தூதுக்கு ழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

ரஷ்ய சுகாதார அமைச்சர் உள்ளிட்ட தூதுக்குழுவி னர் இன்று, கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தைப் பார்வையிடவும், இலங்கை மற்றும் ரஷ்யாவின் சுகாதார அமைச்சகங்களுக்கு இடையில் புரிந்துணர்வுகளை எட்டவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது, ரஷ்ய சுகாதார அமைச்ச ரும் அவரது குழுவினரும், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், மருத்துவ நிபுணர்களின் பயிற்சி மற்றும் கல்விசார் ஒத்துழைப்பு ஆயுர்வேத மருத்துவம், டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் சுற்றுலா சுகாதார சேவைகள் உள் ளிட்ட சுகாதாரத் துறையின் முக்கிய பிரிவுகளில் ஒத்து ழைப்பை மேம்படுத்துவதற்காக, சுகாதார சேவையின் ஒவ்வொரு துறையுடனும் கலந்துரையாடல்களையும் கருத்துப் பரிமாற்றங்களையும் நடத்த திட்டமிட்டு உள்ளனர். (அ)

## தையிட்டி விடயத்தில்...

முயல்கின்றோம். அதற்குள் சிலர் வீதிகளை விடுவிக்க வேண்டும் எனக் குழப்பங்களை ஏற்படுத்தி இனவாதிக ளுக்குத் தீனி போடுகின்றனர்

வீதியை விடுவிப்பதற்கான நடவடிக்கைளை எடுக்கும் போது அதனை குழப்புகின்றனர்.-என்றார். (அ)

## நிதிச் சேவைகள்...

முதலாம் திகதி முதல் மின்னணு தளங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கு வெற் வரி அறவிடப்படும். இதற்காக டிஜிற்றல் சேவைகள் மீதான வரிப் பதிவு மற்றும் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதான சட்டத்தின் 10ஆவது பிரிவின் கீழ் வரிப் பதிவுக்கான வரம்பு குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, வரி விதிக்கத்தக்க காலப்பகுதியின் இறுதியில், இலங்கை க்குள் பொருள்கள் அல்லது சேவைகளின் விநியோகத் தின் மொத்த மதிப்பு 9 மில்லியன் ரூபாயைக் கடந்திருந் தால், அந்த நபர் வரிக்காகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

அதேபோல், நிதிச் சேவைகள் மீதான வெற் வரி வீதத்தை தற்போதுள்ள 18 வீதத்திலிருந்து 20.5 வீதமாக அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. (அ)

## நிதியமைச்சரான...

செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழுவில் முன்னிலையான திறைசேரியின் செய லாளர் ஹர்ஷன சூரியபெரும பல விடயங்களை வெளிப் படுத்தினார்.

இந்த மோசடி தொடர்பில் நிறுவன மட்டத்தில் உள் ளக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஊடாகவும் விசார ணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திறைசேரியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் இன்று கூடவுள்ள நிலையில், இந்த நிதி மோசடி விவகாரம் தொடர்பில் நிதி அமைச்ச ரான,ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விசேட உரையாற்றவுள்ளார். (அ)

# தடையற்ற மின்சார உற்பத்தி நிலக்கரி இறக்கும் பணி தீவிரம்

கொழும்பு, மே. 04

இலங்கையில் தடையற்ற மின்சார உற்பத்தியை உறுதி செய்யும் நோக் கில், அவசர விலைமனு கோரல் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட 5 நிலக்கரி கப்பல்களில் முதலாவது கப்பலில் இருந்து நிலக்கரியை இறக்கும் பணிகள் ஆரம்பமாகியுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்மேற்கு பருவக்காற்று காலத்தின் போது கடல் சீற்றமாக இருக்கும் என்பதால், அதற்கு முன் னதாகவே நிலக்கரி கையிருப்பைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் செயல் பட்டு வருகிறது.

செப்ரெம்பர் மாதம் வரை நுரைச்சோலை நிலக்கரி மின்நிலை யத்தின் செயல்பாடுகளைத் தடை யின்றி முன்னெடுப்பதே இதன் முத ன்மை நோக்கமாகும்.

முந்தைய கொள்முதலில் தரம் குறைந்த நிலக்கரி விநியோகிக்கப்ப ட்டதால் ஏற்பட்ட சிக்கல்களைத் தவிர்க்க, தற்போதைய நிலக்கரியின் தரம் மற்றும் எரிசக்தி அளவு ஆகி யவை உரிய ஆய்வுகளுக்குப் பின்பே ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளன.

வலுசக்தி அமைச்சின் செயலா ளர் ஜி.எம்.ஆர்.டி. அபோன்சு வழங்கிய தகவலின்படி, மூன்று கப்பல்கள் ஏற்கனவே துறைமுக த்தை வந்தடைந்துள்ளன. ஒரு கப்ப லில் உள்ள நிலக்கரியை முழுமை யாக இறக்குவதற்கு சுமார் ஐந்து நாள்கள் எடுக்கும் என்பதால், அனைத்துப் பணிகளும் முறை யாகத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, மே 04

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் காட்டு யானை தாக்கியதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை பெண் ஒருவர் உயிரி ழந்தார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

வீட்டில் இருந்த பெண் அதி காலை நேரத்தில் வெளியே வந்த போதே காட்டு யானையின் தாக்கு தலுக்குள்ளானார்.

உயிரிழந்தவர் திக்கொட்டிய பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் என்று அடையாளம் காண ப்பட்டார்.

காட்டு யானை தாக்குதலால் உயிரிழந்த பெண்ணின் சடலம் தொடர்பில் வெல்லாவெளி பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ)

## பாடசாலை பஸ்...

ஏற்பட்டுள்ளது.

பெற்றோருடன் கலந்துரையாடி கட்டணத்தை ஓரளவுக்கு உயர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என அகில இலங்கை பாடசாலைப் போக்குவரத்துச் சங்கத் தின் செயலாளர் மல்சிறி டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்துக்கமைய டீசல் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் பெற்றோருக்கு சுமையாக இருக்கக் கூடாது என்பதனால் கட்டணத்தை அதிகரிக்கவில்லை.

ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கப் படுகிறது. இவ்வாறான நிலையில் பாடசாலை போக்கு வரத்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. பெற்றோருக்கு சுமையாக அமையாத வகையில் டீசல் விலை அதிகரிப்புக்கு அமைய கட்டணத்தை உயர்த்த எதிர்பார்த்துள்ளோம்.

மிகவும் சிரமத்துடனேயே இந்தத் தொழிலைச் செய்து வருகிறோம். பலமுறை டீசல் விலை அதிகரித்தமையால், இந்த சந்தர்ப்பத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையினால் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. அரசாங்கம் ஏதாவதொரு வழியில் எமக்கு மானியம் வழங்கினால் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்ப டாது - என்றார். (அ)

## தொழிலுக்கு சென்ற...

கள்ளப்பாடு கடற்கரையிலிருந்து படகு ஒன்றில் தொழிலுக்காகச் சென்ற குறித்த இரு மீனவர்களும், நேற்று முன் தினம் இரவு அல்லது நேற்று அதிகாலை யாவது கரை திரும்பியிருக்க வேண்டும். ஆனாலும் நீண்ட நேரமாகியும் குறித்த இரு மீனவர்களும் கரை திரும்பவில்லை. இந்நிலையில் உறவினர்கள் மற்றும் சக மீனவர்கள் இணைந்து நேற்று மாலை வரை 4 படகு களில் சென்று தேடியும் இதுவரை அவர்கள் தொடர் பான தகவல்கள் கிடைக்கவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர்.

காணாமல்போன மீனவர்களையும் அவர்களது படகையும் தேடும் நோக்கில், முல்லைத்தீவு கடற்படைப் பில் இன்று காலை மீனவர்கள் பல படகுகளில் சென்று தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்

இவ்விடயம் தொடர்பாக கடற்படையினர் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட தரப்பினருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில், மீனவர்களின் பாது காப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள் ளனர். (அ)

## காலி சிறையில்...

செல்ல முயன்றபோது, சிறைச்சாலை அதிகாரிகள் துப்பாக் கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த கைதிகளில் ஒருவர் சிகிச்சைக்காக காலி கரப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தப்பிச் செல்ல முயன்ற இரண்டு கைதிகளின் முயற் சியை முறியடிக்கும் நோக்கிலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது. (அ)

## நாட்டை வந்தடைந்த...

ஒதுக்கீட்டை அதிகரிப்பது தொடர்பிலும் அதிகாரி கள் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பஸ் கட்டணம்...

உரிமையாளர்கள் நட்டத்தை எதிர்நோக்க வேண்டி யுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் விளைவாக, எரிபொருள் விலை அதிகரிப்பால் ஏற்படும் நட்டத்தை பஸ் உரிமையாளர்களே சுமக்க வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறுகிய தூர சேவைகளில் ஈடுபடும் பஸ்கள் ஒரு நாளைக்கு சுமார் 500 ரூபாய் நட்டமடைகின்றன.

தூர இடங்களுக்கான சேவைகளில் ஈடுபடும் பஸ்கள் ஒரு நாளைக்கு சுமார் 1,500 ரூபாய் வரை நட்டத்தை எதிர்நோக்குகின்றன.

ஜூலை முதலாம் திகதி வருடாந்த பஸ் கட்டண திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால், ஏனைய செலவுகளும் அதில் சேர்க்கப்படும் எனத் தெரிவித்த அவர், தற்போது டீசல் விலை 10 ரூபாவினால் அதிகரித் துள்ளபோதிலும், இந்த தருணத்தில் கட்டண திருத்த த்தை கோருவதற்கு பேருந்து உரிமையாளர்களுக்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என்றும் கூறினார்.

எனினும், எரிபொருள் விலை அதிகரிப்பு பஸ் தொழில்துறையின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், எரிபொருளின் தரம் குறித்தும் பாரிய சிக்கல் நிலவுவதாகக் குறிப்பிட் டார். (அ)

## வரி, டொலர்...

இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக, நடுத்தர மக்களின் பயன்பாட்டில் உள்ள பிரபல வாகனங்களின் விலைகள் கணிசமான அளவில் உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

அதற்கமைய, ஹொண்டா வெசல் ரக வாகனத்தின் விலை சுமார் 3 இலட்சம் ரூபாவினாலும், டொயோட்டா ரைஸ் ரக வாகனத்தின் விலை சுமார் 2.5 இலட்சம் ரூபா வினாலும் உயரக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பரவலான பயன்பாட்டில் உள்ள சுஸூகி வேகன் ஆர் ரக வாகனத்தின் விலை சுமார் 1.5 இலட்சம் ரூபாவினால் அதிகரிக்கப்படலாம் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் வட்ஸ்அப் உரையாடல் அம்பலம்

## சமூக ஆர்வலர் ஒஸல ஹேரத் வெளிப்படுத்தினார்

கொழும்பு, மே. 04

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு முன்னதாக, அது குறித்து வழங்கப்பட்ட எச்சரிக்கைகள் தொடர்பான புதிய வட்ஸ் அப் உரையாடல்களின் நிழற்படங்களை சமூக ஆர்வலர் ஒஸல ஹேரத் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கும், அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையே பரிமாறப்பட்டதாகக் கூறப்படும் இந்தத் தகவல்களில், வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பொன்று வழங்கிய எச்சரிக்கை குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சஹ்ரான் ஹாஸிம் தலைமையிலான குழுவினர் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை இலக்கு வைத்து ஏப்ரல் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளமை குறித்து இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளின்படி, 2019 ஏப்ரல் 4ஆம் திகதியே இந்த எச்சரிக்கைத் தகவல்கள் முதன்முதலில் கிடைக்கப்பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 8 ஆம் திகதி பாதுகாப்புச் செயலாளருக்கும், ஏப்ரல் 9 ஆம் திகதி உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இந்தத் தகவல் பரிமாறப்பட்ட போதிலும், உரிய கவனம் செலுத்தப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

தற்போது வெளியாகியுள்ள இந்த புதிய வட்ஸ்அப் உரையாடல்கள், புலனாய்வுத் தகவல்களைக் கையாள்வதில் இருந்த பாரிய அலட்சியத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்த உரையாடல்களின் உண்மைத் தன்மை குறித்து இதுவரை அதிகாரபூர்வமான உறுதிப்படுத்தல்கள் எவையும் வெளியாகவில்லை. (அ)

# திறைசேரிச் செயலாளர் பதவி நீக்கம் அரசு எந்த முடிவையும் எடுக்கவில்லை

கொழும்பு, மே. 04

திறைசேரி செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவை பதவியிலிருந்து நீக்குவது குறித்து அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்ட 2.5 மில்லியன் டொலர் திறைசேரி பணம், இணைய உடுருவிகளால் திருடப்பட்ட சம்பவம் இலங்கை அரசியலில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டுள்ளது. குறிப்பாக திறைசேரி செயலாளரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என எதிரணிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையிலேயே தேசிய மக்களின் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என அமைச்சரவைக்குள் இருந்து கோரிக்கைகள் எதுவும் விடுக்கப்படவில்லை என்றும் தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சர்ச்சைக்குரிய நிலக்கரி மோசடி தொடர்பில் சுயாதீன விசாரணைக்கு இடமளித்து அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் அண்மையில் பதவி விலகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# "யாழ்தேவி" உள்ளிட்ட பல ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை

## பயணிகள் கடும் அசௌகரியம்

கொழும்பு, மே 04

டித்வா புயலினால் சேதமடைந்த மன்னார் மற்றும் வடக்கு ரயில் பாதைகளின் திருத்தப் பணிகள் நிறைவடைந்த போதிலும், "யாழ் தேவி" உள்ளிட்ட பல ரயில்கள் இன்னும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

"உத்தர தேவி" கடுகதி ரயில் கூட இதுவரை சேவையில் இணைக்கப்படவில்லை என்று அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏனைய பாதைகளிலும் ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பிரதான ரயில்கள் இவ்வாறு இயக்கப்படாததால் பயணிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு போக்குவரத்து அமைச்சிடம் எந்தவொரு திட்டமும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட மன்னார் மற்றும் வடக்கு ரயில் பாதைகளின் திருத்தப்பணிகள் அனைத்தும் தற்போது நிறைவடைந்துள்ளன.

ஆனால், ரயில்களின் பற்றாக்குறை காரணமாக தலைமன்னார் ரயில் மற்றும் காங்கேசன்துறை வரை பயணிக்கும் பிரதான ரயிலான "யாழ் தேவி" ஆகியவற்றை இன்னும் இயக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அதேபோல், "உத்தர தேவி" கடுகதி ரயிலையும் இதுவரை சேவையில் ஈடுபடுத்த முடியவில்லை.

ஏனைய பாதைகளிலும் ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து முறையான நடவடிக்கை எடுப்பதற்கான ஆயத்தங்கள் திணைக்கள மட்டத்தில் இல்லை.

ரயில்வே பொது முகாமையாளர் முயற்சி செய்தாலும், அமைச்சு மட்டத்தில் தேவையான வசதிகள் கிடைப்பதில்லை என்பது தெரிகிறது. இதனால் பயணிகள் நாள்தோறும் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

மேலும், அரச ஊழியர்களின் புதிய மாதத்திற்கான பருவகால பயணச்சீட்டுகள் உரிய முறையில் ரயில் நிலையங்களுக்கு அனுப்பப்படவில்லை - என்று கூறினார்.

ஏனைய பயணிகளுக்கான பயணச்சீட்டுகளும் சரியான நேரத்தில் வழங்கப்படாததால் ரயில் நிலைய அதிபர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான பல நிர்வாகச் சிக்கல்கள் இருப்பதாகவும், இதனால் ரயில்வே திணைக்களம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி நிலவும் இத்தருணத்தில், ரயில் போக்குவரத்தை அதிகரிக்கவேண்டும் என முன்மொழிவுகள் வழங்கப்பட்ட போதிலும், போக்குவரத்து அமைச்சர் அது குறித்து எவ்வித அக்கறையும் காட்டாமல் செயல்படுவது குறித்து அவர் தமது அதிருப்தியை வெளியிட்டார். (எ)

# அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக விசேட மேல் நீதிமன்ற தீர்ப்பாயம்!

கொழும்பு, மே. 04

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், கிரேக்க பிணைமுறி கொள்வனவின் மூலம் அரசாங்கத்துக்கு ஏற்படுத்திய 1.84 பில்லியன் ரூபா நட்டத்தை மீளச் செலுத்தத் தவறியமைக்காக, அவருக்கு எதிராக விசேட மேல் நீதிமன்ற "ட்ரயல்-அட்-பார்" தீர்ப்பாயம் நியமிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்த கோரிக்கையை ஏற்று, பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேனவினால் இந்த மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசேட நீதியரசர்கள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதியரசர்களான மனோஜ் தல்கொடபிட்டிய, உதேஸ் ரணதுங்க மற்றும் புத்திக சிறீ ராகல ஆகியோர் இந்த அமர்வில் இடம்பெற்றுள்ளனர்.

கிரேக்க நாடு பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருந்த வேளையில், அபாயகரமான முறையில் அந்நாட்டு பிணைமுறிகளில் முதலீடு செய்ததன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு 1.84 பில்லியன் ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட கப்ரால், கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குள் குறித்த நட்டத்தொகையை மத்திய வங்கிக்கு மீளச் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது.

அந்தக் காலக்கெடு முடிவடைந்தும் பணத்தைச் செலுத்தத் தவறியமையால், நீதிமன்ற நிபந்தனைகளை மீறிய குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக இந்த விசேட வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மே 27 முதல் ஜூன் 2 வரை வெசாக் வாரம் பிரகடனம்

கொழும்பு, மே. 04

இந்த ஆண்டின் வெசாக் பௌர்ணமி தினம் மே மாதம் 30ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பௌத்த விவகார திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

இது குறித்து சமூகத்தில் பல்வேறு கருத்துக்கள் நிலவி வரும் பின்னணியிலேயே இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மும்மகா நிக்காயக்களின் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் பௌர்ணமி தினத்தில் "விசாக" நட்சத்திரம் அமைந்திருக்கவேண்டும் என்பதை மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்த ஆண்டு ஜனவரி மாதம் 06ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை சாசனாரக்ஷக கூட்டத்திலும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மே மாதம் 30ஆம் திகதியை வெசாக் பௌர்ணமி தினமாக கருத வேண்டும் என்றும், மே 27ஆம் திகதி முதல் ஜூன் 2ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை வெசாக் வாரமாக அறிவிக்கவேண்டும் என்றும் முன்மொழியப்பட்டதாக பௌத்த விவகார திணைக்களம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (அ)

# இலங்கை கடற்பரப்பை கடந்த ஈரானிய எண்ணெய்க் கப்பல்!

கொழும்பு, மே. 04

இலங்கை கடற்பரப்புக்குள் அவதானிக்கப்பட்ட, ஈரானிய எண்ணெய் கப்பல் ஒன்று, தூர கிழக்கு கடற்பரப்பை அடைந்துள்ளதாக சர்வதேச கடல்சார் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க கடற்படையின் கண்காணிப்பையும் மீறி, சுமார் 19 இலட்சம் பீப்பாய்கள் மசகு எண்ணெயைச் ஏற்றுச் சென்ற ஈரானிய கப்பல் தொடர்பிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

"ஹியூஜ்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ஈரானிய தேசிய எண்ணெய் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பல், சுமார் 220 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெய்யைக் கொண்டு செல்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் அழைப்பு மகிந்தவுக்கு கிடைக்கவில்லை

கொழும்பு, மே. 04

சிறீலங்கன் எயார்லைன்ஸ் எயார்பஸ் விமானக் கொள்வனவு ஊழல் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் எவ்வித உத்தியோகபூர்வ அழைப்பாணைகளும் விடுக்கப்படவில்லை என அவரது ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், ஆணைக்குழுவிடமிருந்து எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவித்தலும் தமக்கு கிடைக்கவில்லை எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன், நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்து ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடும் செயல் எனவும் அவர் சாடியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் நிலக்கரி மோசடி மற்றும் டொலர் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தாத ஆணைக்குழு, ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான விசாரணைகளில் மாத்திரம் அதிக ஆர்வம் காட்டுவது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible]வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.05.2026 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org